பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

17 04 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழகத்தில் 39 மக்களவைத் தொகுதிகளுக்கும், விளவங்கோடு சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்குமான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவடைகிறது.
- தொகுதிக்கு சம்பந்தமில்லாதவர்கள் மாலை ஆறு மணிக்குள் வெளியேற வேண்டுமென்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
- நாளை மறுநாள் வாக்குப்பதிவுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார்.
- ஸ்ரீராமநவமி இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி இரண்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

தமிழகத்தில் 39 தொகுதிகள் உட்பட நாடு முழுவதும் 12 மாநிலங்கள் மற்றும் யுனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் முதல்கட்ட வாக்குப்பதிவு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரமும் இன்று மாலையுடன் முடிவடைகிறது.

இதனையடுத்து அரசியல் கட்சித் தலைவர்களும், வேட்பாளர்களும் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சியின் பிரதிநிதிகளும், வேட்பாளர்களும் வீடு வீடாகச் சென்று இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்காசியில் நேற்று பிரச்சாரத்தில் ஈடுபட்ட பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, தமிழகத்தின் வளர்ச்சிக்காவும். தமிழ்மொழியை மேம்படுத்தவும் தங்கள் கட்சி மிகுந்த அக்கறைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், அனைவருக்கும் வீடு திட்டம், உஜ்வாலா சமையல் எரிவாயு திட்டம் போன்றவற்றால் மாநிலத்தில் அதிகமானோர் பயனடைந்திருப்பதாக அவர் கூறினார்.

தமிழகத்த்.ிற்கு 11 மருத்துவக் கல்லூரிகள் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் ஆளும் திமுக குடும்ப அரசியலுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் திரு ஜெ பி நட்டா குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

கோவை மாவட்டத்தில் வாக்கு சேகரித்த பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல் முருகன், இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு மையமும், பெண்களுக்கான இலவச கல்வி மையமும் அன்னூரில் அமைக்கப்படும் என்று கூறினார்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டம், விவசாய கடனுதவி திட்டம் போன்றவற்றால் அதிக அளவில் மக்கள் பயன்பெற்று வருவதாகவும் திரு முருகன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

சிவகங்கையில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு பா சிதம்பரம், கச்சத்தீவு பிரச்சினையை பெரிதுப்படுத்தி பிஜேபி அரசியல் ஆதாயம் தேட முற்படுவதாகக் குற்றம்சாட்டினார்.

தங்கள் கட்சி சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்கும் என்றும் திரு சிதம்பரம் கூறினார்.

[]<<<>>>[]

ஸ்ரீபெரும்புதூரில் பிரச்சாரம் மேற்கொண்ட திமுக தலைவர் திரு மு க ஸ்டாலின், தமிழகத்தில் மக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை தங்கள் கட்சி செயல்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டங்கள் பலவற்றையும் நிறைவேற்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக நடந்த கொடுமைகள் பற்றி பேச பிஜேபி முன்வரவில்லை என்றும், மகளிருக்கான இடஒதுக்கீட்டுச் சட்டத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

அஇஅதிமுக மக்களுக்காக எதையும் செய்யவில்லை என்றும் திரு மு க ஸ்டாலின் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

அஇஅதிமுக ஆட்சியில் இருந்தபோது தமிழகத்தில் கொண்டுவரப்பட்ட பல திட்டங்களை தம்மால் பட்டியலிட முடியும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக ஆட்சியில் சொல்லும் வகையில் எந்த ஒரு திட்டமும் இல்லை என்பதால் தம்மைப் பற்றியும், தங்கள் கட்சியைப் பற்றியும் குறை சொல்வதாகத் தெரிவித்தார்.

தமிழகத்தின் டெல்டா மாவட்டங்கள் பாதிக்கும் வகையில் கர்நாடக மாநிலம் மேகதாதுவில் தடுப்பணை கட்டுவதற்கு காங்கிரஸ், பிஜேபி ஆகிய இரு கட்சிகளுமே ஆதரவு தெரிவிப்பதால் அக்கட்சிகளுடன் தாங்கள் கூட்டணி வைக்கவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் திரு கே பாலகிருஷ்ணன், மதுரை அண்ணாநகரில் மேற்கொண்ட பிரச்சாரத்தில், பிஜேபி கடந்த பத்து ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான கடனை மட்டுமே தள்ளுபடி செய்தது என்றும், விவசாயிகளுக்கான கடனை தள்ளுபடி செய்யவில்லை என்றும் கூறினார்.

தமிழகத்தில் திமுக விவசாயக்கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் தள்ளுபடி போன்றவற்றை செயல்படுத்தி உள்ளதாக திரு பாலகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று முடிவடைவதையொட்டி மாலை ஆறு மணிக்குள் தொகுதிக்கு வெளியிலிருந்து அழைத்துவரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் உள்ளிட்டோர் வெளியேற வேண்டுமென்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹூ நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட வாகன அனுமதி மாலை ஆறு மணிக்கு மேல் செல்லாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக்கூட்டத்தையோ, ஊர்வலத்தை யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக வலைதளங்களில் தேர்தல் தொடர்பான பிரச்சாரம் மேற்கொள்ளக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி மாலை ஆறு மணிக்கு மேல் பிரச்சாரத்தில் ஈடுபடுவோருக்கு இரண்டு ஆண்டு சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

திருமண மண்டபங்கள், சமுதாயக்கூடங்கள், தங்கும் விடுதிகளில் உள்ள வெளிநபர்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரதா சாஹு தெரிவித்துள்ளார்.

மாவட்ட நிர்வாகங்களும் தேர்தல் தொடர்பான பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன.

வாக்குச்சாவடிகளுக்குத் தேவையான பொருட்களை கொண்டு செல்வது உள்ளிட்ட பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

வாக்குச்சாவடி மையங்களில் சி சி டி வி கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகின்றன.

வாக்காளர்களுக்கு குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ஆய்வு செய்து வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

*( சவுண்ட்பைட் - சிவக்குமார்/ கண்ணன்) -90---- செகண்ட்*

வாக்குப்பதிவையொட்டி மாநிலம் முழுவதும் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

காவல்துறையினருடன், துணை ராணுவப்படையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஸ்ரீராமர் பிறந்த நாளான ராமநவமி இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

அயோத்தியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஸ்ரீராம்லல்லா கோவிலில் இவ்விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் கூட்டத்தை சமாளிப்பதற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஸ்ரீராமநவமியையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்நாள் மக்களை உண்மையாகவும், நேர்மையாகவும் வழிநடத்திச் செல்லும் நாளாக அமைந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீராமர் மனிதகுலத்தின் நம்பிக்கையின் அடையாளமாக திகழ்ந்தவர் என்றும், குடியரசுத் தலைவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு நிதியாண்டில் ஆறு புள்ளி எட்டு சதவீதமாக இருக்கும் என்று சர்வதேச செலாவணி நிதியம் மதிப்பீடு செய்துள்ளது.

**[]<<<>>>[]**

பிரச்சாரத்தின்போது அவதூறாக பேசியதால் காங்கிரஸ் கட்சியின் திரு சுர்ஜிவாலா-வுக்கு நேற்று மாலை ஆறு மணி தொடங்கி 48 மணி நேரத்திற்கு பிரச்சாரத்தில் ஈடுபட தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

**[]<<<>>>[]**

சத்திஷ்கரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கையின்போது நடந்த துப்பாக்கி சண்டையில் 29 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். எல்லை பாதுகாப்புப் படையைச் சேர்ந்த மூன்று பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டது.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி மகளிர் பங்கேற்ற இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

பெரம்பலூர் மாவட்டம் பாலக்கரை பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இரண்டாயிரத்து 500 மாணவ மாணவியர் 100 சதவீத வாக்களிப்பு வடிவில் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் மங்கல தேவி கண்ணகி கோவில் சித்ரா பவுர்ணமி திருவிழாவையொட்டி வரும் 24-ஆம் தேதி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி இரண்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஆறு விக்கெட் இழப்புக்கு 223 ரன் எடுத்தது.

224 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணி எட்டு விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

[]<<<>>>[]